துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது.

# NEW TAMIL READER
## SECOND BOOK

புதிய

## இரண்டாம் பாட புத்தகம்.

E. M. GOPALAKRISHNA KONE,

MADURA & MADRAS.

*Rights Reserved*] 1934 [*Price* 3 *As.*

Excelsior Power Press, Madura.

## சிவிக்ஸ் துரைத்தன விளக்கம் என்னும்

# இராஜாங்க முறை நூல்

## நேச்சர்ஸ்டடி அல்லது இயற்கைப்பொருட்பாடம்.

E. கோவிந்தசாமி ராவ் அவர்கள் எழுதியவை.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் மிகவும் அவசியமானவை

எலிமெண்டரி பாடசாலைகளின் பாடமாக ஏற்பட்டுள்ள (சிவிக்ஸ்) துரைத்தன விளக்கம் என்னும் இராஜாங்கமுறை நூல் இயற்கைப் பொருட்பாட சம்மந்தமான புத்தகங்கள் அநேகம் ஏற்பட்டிருப்பினும்; அவையாவும் நுண்ணறிவுடையோரன்றி ஏனையோர் அதன் விஷயங்களை நன்குணர்த லரிதாயிருப்பது பற்றியும், உபாத்தியாயர்கள் மாணவர்கட்குப் போதிக்கும் சிரமம் பெரிதாயிருப்பது பற்றியும் உபாத்தியாயர்கட்குச் சிரமமின்றி மாணவர்கள் இப்புத்தகத்தைப் படித்த மாத்திரத்தில் இலகுவாய் விஷயங்கள் தெரியும் வண்ணம் பரீக்ஷாதிகாரிகளின் வினுக்களை யனுசரித்தே இனிய எளிய தமிழ் நடையில் எழுதி வெளிப்படுத்தி இருக்கின்றோம். இதனைக் கண்ணுற்ற நண்பர்கள் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம். தனித்தனி விலை அணு 4.

## தமிழ் அச்சுக்காப்பிப் புஸ்தகங்கள்.

A. நாராயணசாமி ஆச்சாரியார் செய்தது.

1 கிர். காப்பி, 2 கிர். காப்பி, 3 கிர். காப்பி, ஷை A காப்பி 4 கிர். காப்பி, 5 கிர். காப்பி, தனித்தனி விலை அணு 1

## செய்யுட் பாடப் புத்தகங்கள்.

| | |
|---|---|
| உலகநீதி மூலமும் உரையும் .... .... .... | பை 9 |
| ஆத்திசூடி மூலமும் உரையும் .... .... .... | பை 9 |
| கொன்றை வேந்தன் மூலமும் உரையும் .... | பை 9 |
| வெற்றி வேற்கை மூலமும் உரையும் .... .... | பை 9 |
| மூதுரை அல்லது வாக்குண்டாம் உரையுடன் .... | அணு 1 |
| நன்னெறி மூலமும் உரையும் .... .... .... | அணு $1\frac{1}{2}$ |

இவை மூலச்செய்யுள்கட் கேற்ற பதவுரையும் கருத்துரையும் இலக்கணக் குறிப்பும் பாடசாலைச் சிறுவர்கட்கு ஏற்றவாறு இலகுவான நடையில் எழுதப் பெற்றுள்ளன.

# புதிய
# இரண்டாம் பாட புத்தகம்.



துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருள் ஒருவரும்,
புத்தக வர்த்தகருமாகிய,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வெளியிட்டது.

---

ரிஜிஸ்தர்செய்தது]    1934.    [விலை அணா ௩

Printed at the
Excelsior Power Press,
Madura.

# முகவுரை.

இப்புத்தகத்தில் அமைந்துள்ள **பாடங்கள்** வித்தியா விசாரணை அதிகாரிகளின் விதிகளை அநுசரித்துப் புதிய முறைக்குப் பொருத்தமாயும், நம் தாய் மொழியாகிய தமிழ்ப் பாஷையைக் கற்கும் மாணவர் தக்க வழியிற் கற்று, மிக்க பயன் பெறுமாறும் எழுதப்பெற்றுள்ளன.

2. தொடர் முறைப் போதனைக்கும் பொருந்தியுள்ளன.

3. பாடங்கள் பெரும்பான்மை பொருட்பாட சம்பந்தமாகவும், நீதிக்கதை சம்பந்தமாகவும், சிறு பான்மை பாட்டுக்களாகவும் தொகுக்கப்பெற்றுள்ளன.

4. ஆங்காங்கு நீதி வாக்கியங்களும் கதைகட்குத் தக்கவாறு சமயம் நோக்கி அமையப் பெற்றுள்ளன.

5. நீதிபோத சம்பந்தமான பாடங்கள் சிறுவர்கள் மன வெறுப்பு அடையாமல், உற்சாகத்துடன் படிக்குமாறு வேடிக்கையானதும், விளையாட்டானதும் அறிவு நிரம்பத் தக்கதுமான கதைகளாக எழுதப்பெற்றுள்ளன.

6. முதலில் தெய்வ வணக்கப் பாடல்களும், ராஜவணக்கப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை 'சிறுவர்மனதில் நன்கு பதிந்தால் பருவ காலத்தில் தெய்வ பக்தி, ராஜ விசுவாசம் முதலியன அபிவிருத்தியாகி, நலம் பெறுவார்கள்' என்னும் நல் நோக்கத்தோடு எழுதப்பெற்றுள்ளன.

7. பாடங்கள் வகுப்புக்குத் தக்கவாறு சிறிது சிறிதாய்க் கற்பிக்கவேண்டும் என்ற தற்கால முறைக்கிணங்க ஆரம்பத்தில் சிறிய பாடங்களாகவும் இடையில் சிறிது வளர்த்து ஈற்றில் பெரிய பாடங்களாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன.

8. சில பாடங்கள் மாணவரைக் கொண்டு நாடகமாக நடத்துதற்கேற்றவாறு நன்கு அமைந்துள்ளன.

9. இப்புத்தகத்தைக் கண்ணுறும் போதனை ஆசிரியர்கள் இதனை நன்கு ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நூலாசிரியன்.

# கடவுள் துதி.

"கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்றபாடலின் சந்தம்.

ஆதியுமாய் அந்தமுமாய்
அகிலம் நிறை பொருளே!
அருள்வடிவாய் உலகம்எல்லாம்
அளந்து காக்கும் பொருளே!
எல்லார்க்கும் நன்மைபுரியும்
ஏக பரம் பொருளே!
எள்ளினுள்ளே எண்ணெயைப்போல்
எங்கும் உள்ள பொருளே!
ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் மேரி
அன்னை போற்றும் பொருளே!
அன்னவர்கள் சேயரோடு
அவனி ஆள அருளே!
பூர்த்திபெறு கல்வி ஆயுள்
பொங்கு செல்வம் ஓங்க!
போற்றுகின்றோம் பாலர் அன்பாய்
புகழும் வாழ்வும் அருளே!

## நமது இந்திய சக்கரவர்த்தியாகிய

## ஐந்தாம் ஜார்ஜ் மகிபர் மீது

### வாழ்த்துப் பாடல்கள்.

''குற்றம் நீ குணங்கள் நீ'' என்ற பாடலின் சந்தம்.

---

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே;
வாழ்க ஐந்தாம் ஜார்ஜரசர்
வாழ்க நாளும் வாழ்கவே.
சக்கர வர்த்தி ஐந்தாம் ஜார்ஜ்
சந்த தமும் வாழ்கவே
மிக்க கீர்த்தி மிகுராணி
மேரி அன்னை வாழ்கவே.
கல்விச் செல்வம் நமக்கீந்த
கருணை வள்ளல் வாழ்கவே;
செல்வ ரான இளவரசர்
சிந்தை மகிழ்வாய் வாழ்கவே

# பொருள் அடக்கம்.


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1—13. | வாக்கிய பாடங்கள் | 7—19 |
| 14. | ஆடு | 20 |
| 15. | ஆலமரம் | 21 |
| 16. | குதிரை | 22 |
| 17. | அணில் | 23 |
| 18. | தவளை | 24 |
| 19. | யானைகள் | 25 |
| 20. | பூச்செடி | 26 |
| 21. | ஈக்கள் | 27 |
| 22. | பசு | 28 |
| 23. | நாய் | 30 |
| 24. | குயவன் | 32 |
| 25. | வாழைமரம் | 34 |
| 26. | பூனை | 36 |
| 27. | தபால்காரன் | 38 |
| 28. | பசியால் அலைந்த நரி | 41 |
| 29. | பொய் சொல்லாதே | 42 |
| 30. | சுத்தம் சுகம் தரும் | 45 |
| 31. | எலி | 47 |
| 32. | மதிகெட்ட காக்கை | 49 |
| 33. | சங்கரன் | 51 |
| 34. | பல்லி | 53 |
| 35. | உண்மை பேசிய பையன் | 55 |
| 36. | உண்மை பேசிய பையன் 2-ம் பாகம் | 59 |
| 37. | விடுகதைகள் | 62 |
| | உலகநீதி | 63 |

புதிய

# இரண்டாம்பாடபுத்தகம்






## முதல் பாடம்



1. அப்பா! இது யார் படம்?
2. இது நமது அரசர் படம்.
3. இவர் பெயர் "ஐந்தாம் ஜார்ஜ்"
4. இவர் மனைவி "மேரி ராணி"
5. இவர் மிக்க அன்பு உள்ளவர்.
6. இவரால் நமக்கு நன்மை உண்டு.



2] மயில். [உ

1. மயில் மிகவும் அழகான பட்சி.
2. இதோ பார்! நான்கு மயில்கள்.
3. ஆண் மயிலுக்கு இறகு நீளம்.
4. அது சிறகை விரித்து ஆடும்.
5. நிறம், நீலம், பச்சை, மஞ்சள்.
6. பார்க்க மிக்க இன்பந் தரும்.



3] அவயவங்களின் வேலை. [௩

1. தலையால் வணங்கலாம்.
2. கண்களால் பார்க்கலாம்.
3. காதுகளால் கேட்கலாம்.
4. மூக்கினால் முகரலாம்.
5. வாயினால் பேசலாம்.
6. கைகளால் கும்பிடலாம்.
7. விரல்களால் பிடிக்கலாம்.
8. கால்களால் நடக்கலாம்.




4] தொழிலாளிகள். [௪

1. தட்டான் நகைகள் செய்கிறான்.
2. தச்சன் மரவேலை செய்கிறான்.
3. கொல்லன் இரும்பு வேலை செய்கிறான்.
4. கன்னான் பித்தளை வேலை செய்கிறான்.
5. குயவன் மண்பாண்டம் செய்கிறான்.
6. சேணியன் துணி நெய்கிறான்.
7. கொத்தன் வீடுகள் கட்டுகிறான்.
8. செம்படவன் மீன் பிடிக்கிறான்.
9. மாணாக்கன் பாடம் படிக்கிறான்.
10. உபாத்தியாயர் பாடம் கற்பிக்கிறார்.




5] சப்த பேதங்கள். [௫

1. காகம் காகா என்று கத்துகிறது.
2. மழை சோ என்று பெய்கிறது.
3. காதுகள் தும் என்று அடைபட்டன.
4. பிள்ளைகள் கொல் என்று சிரித்தார்கள்.
5. மார்பு படபட என்று அடித்தது.
6. மனம் பத பத என்று துடித்தது.
7. மரம் மடமட என்று ஒடிந்தது.
8. பொழுது பல பல என்று விடிந்தது.
9. வேலன் பல்லை நெறுநெறு என்று கடித்தான்.
10. பாலன் பாடம் தடதட என்று படித்தான்.
11. நெருப்பு தக தக என்று எரிகிறது.
12. அப்பளம் சுறு சுறு என்று பொரிகிறது.




6] அடுக்கு மொழிகள். [கூ

1. தேங்காய் குலே குலேயாய்-காய்த்தது.
2. பூ கொத்து கொத்தாய்-பூத்தது.
3. மனிதர்கள் கூட்டங் கூட்டமாய்-கூடினர்.
4. மாடுகள் மந்தை மந்தையாய்-மேய்கின்றன.
5. வண்டுகள் வரிசை வரிசையாய்-வருகின்றன.
6. எறும்புகள் சாரைசாரையாய்-ஊருகின்றன.
7. குருவிகள் கும்பல் கும்பலாய்-பறக்கின்றன.
8. மின்னல் பளிச் பளிச் சென்று மின்னும்.
9. வாழைப் பழம் சீப்புசீப்பாய்-வளர்கிறது.
10. மரத்தின் மேல் சரசர என்று ஏறுகிருன்.




[7 புளியமரம். [எ

1. தம்பி! இதோ பார் புளியமரம்.
2. இதன் கிளைகள் மிகப் பெரியவை.
3. ஆனால் இலைகள் மிகவும் சிறியவை.
4. பூ வெளிறின மஞ்சள் நிறமானது.
5. காயின் மேலே பச்சை, உள்ளே வெள்ளை.
6. பழம் சிவப்பு, தின்றால் புளிப்பு.
7. இதில் குழம்பு, ரசம் செய்து உண்ணலாம்.
8. பழத்தின் உள்ளே கொட்டைகள் உண்டு.
9. கொட்டையின் தோல் சிவப்பாய் இருக்கும்.
10. அதன் பருப்பு வெளுப்பாய் இருக்கும்.



8] சூரியன். [அ

1. சூரியன் அதிகாலையில் கிழக்கே உதிக்கும்.
2. அது மத்தியானம் உச்சியில் வரும்.
3. மாலையில் மேற்கே மறையும்.
4. அது உஷ்ணமும் வெளிச்சமும் தருகிறது.
5. சூரியன் உள்ள நேரம் பகல்.
6. சூரியன் இல்லாத நேரம் இரவு.
7. இரவும் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.
8. ஏழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம்.
9. நான்கு வாரங்கள் சேர்ந்தது ஒரு மாதம்
10. பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்



9] நல்லபாம்பு. [௯

1. இதோ பார்! நல்ல பாம்பு.
2. இது படம் எடுத்து ஆடுகிறது.
3. இதற்குக் கோபம் உண்டானால் சீறும்.
4. பாம்பு மார்பினால் ஊர்ந்து செல்லும்.
5. இதற்கு நாக்கு இரண்டு பிளவாய் இருக்கும்.
6. இதன் முதுகில் எலும்புகள் உண்டு.
7. இதற்குப் பல்லில் விஷம் இருக்கிறது.
8. பாம்பு கடித்தால் அபாயம் உண்டாகும்.
9. ஆகையால் பாம்பின் பக்கம் போகாதே.
10. பாம்பு என்றால் படையும் நடுங்கும்.
11. பாம்புக்குப் பகை கருடன்.



[10 சம்பாஷணை. [௰

பெரியவர்:-பையா! நீ எங்கே போகிறாய்?
பையன்:-ஐயா! நான் பாடசாலைக்கு-போகிறேன்.
பே:-அப்பா! நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?
பை:-ஐயா! நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.

பே:-கண்மணி! உன் பெயர் என்ன?
பை:-ஐயா! என் பெயர் ராமன்.
பே:-கண்ணே! உனக்கு வயது என்ன?
பை:ஐயா! எனக்கு வயது ஆறு ஆகிறது.
பே:-தம்பி! சற்று நில்; நான் சொல்வதைக் கேள்.
பை:-நல்லது ஐயா! அப்படியே செய்கிறேன்.

காலையில் எழுந்து கடவுளைத் துதிசெய்.

முகம், கை, கால் முழுதும் சுத்தம் செய்.

காலை மாலை நூலை ஓது.

உனக்குள்ள பாடங்களை ஒழுங்காய்ப் படி.

கவனம் வைத்துக் கருத்துடன் படி.

உபாத்தியாயர் சொல்லை ஒரு நாளும் மறவாதே.

கூழ் ஆனாலும் குளித்துக் குடி.

கந்தை யானாலும் கசக்கிக் கட்டு.

இட்ட போஜனத்தை இன்பமாய்ச் சாப்பிடு.

வீட்டில் இல்லாததைக் கேட்டு அழாதே.

நேரமாகாமல் நேராகப் பள்ளிக்கூடம் போ.

தாயார், தகப்பனார், அண்ணன், அக்காள், உபாத்தியார் உனக்குப் பெரியோர்.

பெரியோரைப் பார்த்தால் மரியாதை செய்.

ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு ஒழுங்காகப் போ.

விளையாட்டாக, புழு, பூச்சி, குருவிகளைப் பிடித்து, தொந்தரவு செய்யாதே.

---

12] நீதி போதப் பாடல்கள். [மஉ

1. பள்ளிக்கூடப் பாலர்களே!
பாடல் கேட்பீர் சீலர்களே!(பள்)

2. அதிகாலையிலே எழுந்திடுவோம்;
அன்னை தந்தையைத் தொழுதிடுவோம்.(பள்)

3. கைகால் சுத்தம் பண்ணிடுவோம்;
கடவுள் பாதம் எண்ணிடுவோம்.(பள்)

4. புத்தகத்தை எடுத்திடுவோம்;
புதிய பாடம் படித்திடுவோம்.(பள்)


5. படித்த பழைய பாடமெல்லாம்;
படித்துத்தேறுவ தேமேலாம்.(பள்)

6. நன்முகப் படிப்போமே;
நன்மை அடைகு வோம் நாமே.(பள்)

7. நல்லபிள்ளை நாமென்று;
நடந்துகொள்வ தே நன்று.(பள்)


8. துஷ்டப்பிள்ளை நேசமே;
துன்பம் செய்யும் மோசமே.(பள்)

9. மெய்யே என்றும் பேசுவது;
மிக்க நன்மை யாகுமது.(பள்)



13] தண்ணீர். [மாட

1. தண்ணீர் ஆறுகளில் ஓடுகிறது.
2. குளங்களில் தண்ணீர் தேங்குகிறது.
3. நாம் தண்ணீரைக் குடிக்கிறோம்.
4. தண்ணீர் நமக்குக் குளிக்க உதவுகிறது.
5. சுத்த ஜலம் கண்ணாடிபோல் இருக்கும்.
6. வண்டல் படியாது; நிறம் ருசி மணம்இல்லை.
7. அது மேட்டிலிருந்து பள்ளத்தில் பாயும்.
8. தண்ணீர் வெப்பத்தால் ஆவியாக மாறும்.
9. அது நமக்கு மிகவும் உபயோகமானது.
10. ஆகையால் அதை அசுத்தம் செய்யாதே.




14] ஆடு. [கசு

1. ஆடு சாதுவானமிருகம். அது யாருக்கும் கெடுதி செய்யாது. ஆடுகளில் வெள்ளாடு, செம்மறியாடு, குறும்பையாடு எனப் பலவகை உண்டு.

2. ஆட்டின் காலில் குளம்புகள் உண்டு. தலை சிறியது. இதன் கொம்புகளைப் பார். சில வகை ஆடுகளுக்குக் கொம்புகள் இல்லை.

3. ஆடு பலவிதமான இலைகளையும் தளிர்களையும் தின்னும். அதற்கு முக்கியமான ஆகாரம் புல். ஆட்டு மயிரால் கம்பளி நெய்வார்கள். அது குளிர்காலத்தில் போர்வையாக உதவும்.




## 15] ஆலமரம். [கரு

1. மரங்களில் எல்லாம் பெரியது ஆலமரம். இதன் கிளைகள் விசாலமாய்ப் படர்ந்து இருக்கின்றன. இதன் பழம் மிகவும் சிறியது. அது சிவப்பு நிறமாய் இருக்கும்.

2. ஆலம் விழுதுகள் கிளைகளில் இருந்து தொங்குகின்றன. முதிர்ந்த விழுதுகள் பூமிக்குள் இறங்கி மரம்போல் வளர்கின்றன. அந்த விழுதுகள் கிளைகளைத் தாங்குகின்றன.

3. ஆலமரத்து நிழல் குளிர்ச்சியாய் இருக்கும். அதில் அநேகம்பேர் தங்கலாம். இலைகளைத் தைத்து அதில் சாதம் சாப்பிடலாம். காய்ந்த இலைகளும், குச்சிகளும் அடுப்பு எரிக்க உதவும்.



16] **குதிரை.** [கசு

1. குதிரையின் படத்தைப்பார். இது மிக உபயோகமுள்ள மிருகம். குதிரை அதிக வேகமாய் ஓடும்; வண்டி இழுக்கும்; சவாரி செய்ய உதவும்.

2. குதிரையின் கால்கள் உயரமானவை. பாதங்களில் வட்டமான குளம்புகள் உண்டு. அதன் வாலில் மயிர் அடர்ந்து தொங்குகிறது. அதனால் அது தன்மேல் உட்காரும் ஈ, கொசு முதலியவைகளையும் ஓட்டிக்கொள்ளும்.

3. குதிரை புல்லைத் தின்னும்; தண்ணீர்குடிக்கும். கொள்ளைத்தின்ன அதற்குப் பிரியம் அதிகம். குதிரைக்குச் சந்தோஷம் வந்தால் கனைக்கும்.



17] **அணில்.** [கஎ

1. அப்பாசாமி! இது ஒரு அணில் படம். அணில் அழகான சிறு பிராணி. அதன் முதுகில் மூன்று கோடுகள் இருக்கின்றன. அதன் வாலில் உரோமம் அடர்த்தியாய் இருக்கிறது.

2. அணில் மரங்களிலும் வீடுகளிலும் வசிக்கும். பறவைகள் போல் கூடுகட்டிக் கொள்ளும். அது மரத்துக்கு மரம் தாவி விளையாடும்.

3. அணிலுக்கு ஆகாரம் என்ன தெரியுமா? மரங்களில் பழுத்த பழங்களைத் தின்னும். பழத்தின் கொட்டைகளை நன்றாய் மென்று தின்னும். நெல் முதலியவற்றைக் கொரித்துத் தின்னும். அதற்குக் கூர்மையான பற்கள் உண்டு.

4. தாய் அணில், தன் குஞ்சுகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும். அணில் சாதுவான ஜெந்து. நாம் அதை அடிக்கக்கூடாது.




18] ## தவளை. [கஅ

1. தங்கமுத்து! இது ஒரு தவளையின் படம். அது குளம், கிணறு, குட்டைகளிலும், தரையிலும் வசிக்கும். தவளைக்குக் கண் பெரியது. மிகவும் சிறிய பூச்சிகளையும் பார்த்துவிடும்.

2. தவளை நீரில் நீந்தும், தரையில் தாவித் தாவி ஓடும். நடந்து செல்ல மாட்டாது. தவளை முட்டையிடும். பின்பு முட்டை நீண்டு உடையும். அதிலிருந்து குஞ்சு வெளிப்படும். தவளைக்குஞ்சு மீன் குஞ்சைப்போல் கறுப்பாயிருக்கும்.

3. தவளையின் நாக்கில் ஒரு விதமான பிசின் உண்டு. அதனால் எந்தப் பூச்சியும் அதன் நாக்கில் பட்டவுடன் ஒட்டிக்கொள்ளும்.

4. தோட்டங்களிலும், வயல்களிலும் பயிர்களைத் தின்கிற சில பூச்சிகளைப்பிடித்துத் தின்னும். அதனால் நமக்கு நன்மை உண்டு. ஆதலால் தவளையை அடிக்கக்கூடாது.



19] யானைகள். ௧௯

1. இராமா! இது யானைகளின் கூட்டம். யானை காட்டு மிருகம். நிலத்தில் வசிக்கும் பிராணிகளில் இதுதான் பெரியது.

2. யானையின் முகத்தில் நீளமாய்த் தொங்குவது தும்பிக்கை. அது தும்பிக்கையினால் மூச்சு விடும்; தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும்; மரக் கிளைகளை முறித்துத் தள்ளும்.

3. யானை, இலை தழைகளைத் தின்னும். கரும்பைத் தின்ன இதற்குப் பிரியம் அதிகம். இதன் வாயின் இரு பக்கங்களிலும் வெண்மையாய் நீண்டு இருப்பது தந்தம். ஆண் யானைக்குத் தான் தந்தம் உண்டு. தந்தத்தால் கத்திப்பிடி, சீப்பு, சிறிய பெட்டிகள் முதலியன செய்யலாம்.




20] **பூச்செடி.** [உ0

1. அண்ணு! இது என்ன? தம்பி இது ஒரு பூச்செடி. இதில் உள்ள புஷ்பங்களைப் பார்! இவை மலர்ந்த புஷ்பங்கள்.

2. மலர்ந்த புஷ்பங்கள் அழகும், வாசனையும் உள்ளவை. புஷ்பங்களால் மாலைகளும், செண்டு களும் கட்டுவார்கள்; சரமாகவும் தொடுக்கிறுர் கள். மலராத புஷ்பத்திற்கு 'அரும்பு' என்று பெயர். அதற்கு வாசனை கிடையாது.

3. பூச்செடிகளுக்குத் தினந்தோறும் தண் ணீர் விட வேண்டும். சூரிய வெளிச்சத்தில் செடி கள் நன்ருய் வளரும். ஆகையால் செடிகளுக்கு உஷ்ணமும், வெளிச்சமும் அவசிய மானவை.




21] **ஈக்கள்.** [உக

1. இங்கே நான்கு ஈக்கள் இருக்கின்றன. ஈ பறக்கும் ஜெந்து, அதற்கு இறக்கைகள் இரண்டும் கால்கள் ஆறும் இருக்கின்றன.

2. ஈ சாக்கடை முதலிய அசுத்தமான இடங்களில் பறந்து திரியும். தித்திப்புள்ள இடங்களில் மொய்க்கும்.

3. ஈக்களில் வீட்டு ஈ, மாட்டு ஈ, தேன் ஈ என மூன்று வகை உண்டு. தேனீயின் தலையில் விஷம் உண்டு. தேனீயின் கூட்டில் தேன் உண்டு.

4. புண்களில் ஈ உட்கார்ந்தால் புழு வைக்கும். ஈக்கள் விழுந்து இறந்த பதார்த்தங்களைப் புசித்தால் வாந்தி வரும். ஈக்கள் மொய்த்த பதார்த்தங்களையாவது, இறந்து விழுந்து கிடந்த வஸ்துக்களையாவது சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் பலவித வியாதிகள் உண்டாகும்.



22] ## பசு. [உஉ

1. பையா! இது ஒரு பசு மாடு. இதன் கன்று அருகில் கட்டியிருக்கிறது. ஒரு மனிதன் பால் கறக்கிறான். அவன் கையில் ஒரு சிறிய செம்பு இருக்கிறது. கீழே ஒரு பெரிய செம்பும், பின்னால் ஓர் உழக்கும் இருக்கின்றன. பாலைச் சிறிய செம்பில் கொஞ்சம் கொஞ்சமாய்க் கறந்து பெரிய செம்பில் ஊற்றுவான்.

2. பசு சாதுவான மிருகம். இது எல்லா இடங்களிலும் காணப்படும். தன்னைத் தொந்தரவு செய்யும் ஈ, கொசு, எறும்பு முதலியவற்றைத் தன் வாலால் விரட்டும். தன்னோடு


எதிர்த்துச் சண்டைக்கு வரும் விரோதிகளைக் கொம்புகளால் முட்டித் துரத்தும்.

3. பசு, புல் மேயும்; வைக்கோலும், சோளத் தட்டையும் தின்னும். வீட்டில் வளர்ப்பவர்கள் பருத்தி விதையை உரலில் ஆட்டித் தண்ணீர் விட்டுத் தவிட்டுடன் கலந்து வைப்பார்கள். பசு அதை அதிக ஆவலாய் உண்ணும். சிலர் பிண்ணுக்கும் வைப்பார்கள். இதனுல் அதற்குப் பால் அதிகம் சுரக்கும்.

4. பால் கறப்பவர்கள் முதலில் கன்றைப் பால் குடிக்கும்படி விடுவார்கள். கன்று குடிப்பதற்காகப் பசு பாலை அதிகமாய்ச் சுரக்கச்செய்யும். அச்சமயத்தில் கன்றைக் கட்டிவிட்டுப் பாலைக் கறந்து கொள்வார்கள். பாலைக் கறந்த பிறகு கன்றை அவிழ்த்து விடுவார்கள். பின்னுல் சுரக்கும் பாலைக் கன்று குடிக்கும். இம்மாதிரி காலை மாலை இரண்டு வேளையும் பால் கறப்பார்கள்.

5. பால் வெண்மை நிறமானது. அது குடிக்க ருசியாயிருக்கும். அதனுல் உடம்புக்கு அநேக நன்மைகள் உண்டு. பாலைக் காய்ச்சி, உறையிட்டு, தயிர், மோர், வெண்ணெய் எடுப்பார்கள். வெண்ணெயை உருக்கி நெய் ஆக்கலாம். இவை போஜனத்துக்கு உபயோகமானவை.

6. பசுவைப் பாலுக்காகவும், அதன் குணத்துக்காகவும் வளர்க்கிறோம்.



23] ## நாய். [உங

1. இது என் நாய். இதை நான் பட்சமாய் வளர்க்கிறேன். இதன் கழுத்தில் ஒரு பட்டை மாட்டி இருக்கிறது. இந்த நாய் நல்ல நாய். இதன் நிறம் கறுப்பும் வெள்ளையும் கலந்தது. இது என்மீது பிரியமாய் இருக்கிறது.

2. நாய்களில் பல வகை உண்டு. சில உயர மாயும், சில குள்ளமாயும், சில ஒல்லியாயும் இருக்கும். நிறங்களில் பல விதம் உண்டு


3. எல்லா நாய்களுக்கும் மயிர் ஒரே மாதிரி இராது. சில நாய்களுக்கு மிருதுவாயும் சில நாய்களுக்குக் கரடு முரடாயும், சில நாய்களுக்குச் சுருட்டையாயும் இருக்கும்.

4. நாய்களில் பட்டிநாய், சடைநாய், குச்சு நாய், வேட்டைநாய் எனப் பலவகை உண்டு.

5. நாயின் உடல் நீளம், தலை சிறுத்து, நீண்டு இருக்கும். வாயில் கூரான பற்கள் உண்டு. காதுகள் சில நாய்களுக்கு நிமிர்ந்தும், சில நாய்களுக்கு மடிந்து தொங்கிக்கொண்டும் இருக்கும். வால் வளைந்து இருக்கும். முன் கால்களில் ஐந்து விரல்களும், பின் கால்களில் நான்கு விரல்களும் உண்டு. அவை மண்ணைப் பறிக்கவும், குழி தோண்டவும் ஏற்றவை.

6. நாய் நன்றி அறிதல் உள்ள பிராணி. அது தன்னை வளர்ப்பவர் இடத்தில் பிரியமாயிருக்கும். வீட்டிற்குள் அன்னியர் வராதபடி காவல் காக்கும். திருடனைக் கண்டால் குலைக்கும். சந்தோஷம் வந்தால் வாலை ஆட்டும். கோபம் வந்தால் பல்லைக்காட்டி உறுமும்.

7. நாய் தூரத்தில் உள்ள பொருள்களை வாசனையால் அறிந்து கொள்ளும். அது சாதம், பால், மாமிசம் முதலிய உணவுகளைப் புசிக்கும். நாக்கினால் தண்ணீரை நக்கிக் குடிக்கும். எலும்பை அதிக ஆவலுடன் கடிக்கும்.



## 24] குயவன். [உச

1. இந்தப் படத்தில் நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்? ஒருவன் பானை செய்துகொண் டிருக்கிறான். அருகில் அநேக சட்டிபானைகள் அடுக்கி இருக்கின்றன. இவன் யார்? இவன் குயவன். மண் பாண்டங்கள் செய்பவன்.

2. இந்தப் பானைகள் களிமண்ணால் செய்யப் படுகின்றன. குயவன் முதலில் நல்ல களி மண்ணைக் கொண்டுவருவான். அதில் தண்ணீரை ஊற்றி ஊறவைப்பான். அத்துடன் கொஞ்சம் பொடிமணலைக் கலப்பான். பின் அதை நன்றாய் மிதித்துப் பக்குவப் படுத்துவான்.


3. பிறகு பக்குவமான மண்ணைச் சக்கரத்தில் வைப்பான். அதைக் கையாலாவது, பக்கத்தில் வைத்திருக்கும் தடியாலாவது சுற்றுவான். அப் போது சக்கரம் சுழலும். கையால் மண்ணைப் பிடித்துத் தனக்கு வேண்டிய பாத்திரத்தின் உடல், கழுத்து உண்டு பண்ணுவான்.

4. இப்படிப் பாத்திரங்களைச் செய்த பிறகு நிழலில் உலர வைப்பான். வெயிலில் காயவைத் தால் விரிந்து விடும். நிழலில் உலர்ந்த பிறகு, சூளையில் அடுக்கி வைத்துச் சுடுவான். சூளை எரிக்கச் சருகுகளும் சுள்ளிகளும் வேண்டும்.

5. சுட்டபானைகளை ஒவ்வொன்றாய் எடுத்து அடுக்கி வைப்பான். ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய சட்டி பானைகளைப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு போவார்கள்.

6. சரியாய்ச்சுட்ட மண்பாண்டம் கெட்டியா யிருக்கும். நல்ல தொனியுள்ளதாயும் இருக்கும். மண் பாத்திரத்தில் வைத்திருக்கும் தண்ணீர் குளிர்ந்திருக்கும். வெயில் நாட்களில் குளிர்ந்த ஜலம் குடிக்க நன்றாய் இருக்கும். சுடாத பாத்தி ரங்களிலும், நன்றாய்ச் சுடாமல் அரை குறை யாய்ச் சுட்ட பாத்திரங்களிலும் ஜலம் எடுக்கக் கூடாது. எடுத்தால் சீக்கிரம் உடைந்துவிடும்.

7. களிமண்ணால் செங்கலும், ஓடும் செய்ய லாம். பலவித உருவங்களும் செய்கிறார்கள்.



25] ## வாழைமரம். [உரு

1. முத்து! இதோ குலே தள்ளிய வாழை ஒன்று இருக்கிறது. அதன் அருகே ஒரு வாழைக் கன்றும் நிற்கிறது. இம்மாதிரி வாழை மரம் வீட்டின் கொல்லேயிலும், தோட்டங்களிலும் வளருகிறது.


2. வாழை மரத்திற்கு விதை கிடையாது. தரையில் ஆழமாய்க் குழிகள் தோண்டி, வாழைக் கன்றுகளே வைக்கவேண்டும். தினந்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்து வந்தால், கன்றுகள் குருத்து விட்டு வளர்ந்து மரமாகும். பத்தாவது மாதம் பலன் தரும்.

3. வாழை மரம் மற்ற மரங்களைப் போல் கெட்டியாய் இராது. மட்டைகள் ஒன்றின் மேல் ஒன்றாய்ச் சேர்ந்து மரமாய் நிற்கிறது. இதற்குக் கிளைகள் இல்லை. வாழை மரத்தில் அநேக வகைகள் உண்டு. அவை பேயன், ரஸ்தாளி, பூவன் எனப் பல பெயர் உள்ளவை.

4. வாழைக்கன்றுகள் நட்டது முதல் நான்கு பக்கங்களிலும் மாறிமாறி, இலைகள் விடும். கடைசியில் 5 அல்லது 6 மாதத்தில் 'கண்ணாடி இலை' என்ற சிறு இலை வெளிவரும். அதன்பின் பூவும், பின்னே காயும் தோன்றும். காய் பச்சை நிறம். பழம் மஞ்சள் நிறம். ஒரு தடவை குலை தள்ளிய மரம் மறுபடியும் பலன் தராது.

5. வாழைமரம் நமக்குப் பலவகைகளில் உபயோகமாகிறது. மரத்தை அழகுக்காகக் கலியாணப் பந்தலில் கட்டுகிறோம். காயையும், பூவையும், உள்ளே இருக்கும் தண்டையும் சமைத்துச் சாப்பிடுகிறோம். காய் துவர்ப்பாய் இருக்கும். பழம் இனிப்பாய் இருக்கும். வாழைநார் பூக்கள் தொடுக்க உதவுகிறது. வாழை நாரினால் வஸ்திரங்களும் நெய்கிறார்கள்.

6. எல்லாக் காலத்திலும் வாழை இலை, பூ, காய், பழம் முதலியவை கிடைக்கும். ஆகையால் இதைப் பயிர் செய்தால் மிகவும் நல்லது.



26]

# பூனை.

1. இராமா! நமது வீடுகளில் திரியும் ஜந்துக்களில் பூனை ஒன்று. அதைப்பற்றி நீ அறிய வேண்டியது அவசியம். மேலே பார்! ஒரு பூனை படுத்திருக்கிறது. அதன் பக்கத்தில் குட்டிகள் விளையாடுகின்றன.

2. பூனையின் உடம்பில் மிருதுவான மயிர் அடர்ந்து இருக்கும். தடவிப்பார்த்தால் பட்டுப் போல் இருக்கும். தலை உருண்டை வடிவமானது. காதுகள் நிமிர்ந்து நிற்கின்றன. முகத்தில் மீசை மயிர்கள் நீண்டு இருக்கின்றன. இதன் நாக்கு சொறசொறப்பாய் இருக்கும். அதனால் எலும்பிலுள்ள மாமிசத்தைக் கொஞ்சமும் விடாமல் நக்கித் தின்னும். பற்கள் கூரானவை. ஆகாரத்தை மென்று தின்னாமல் கடித்து விழுங்

கும். கருவிழிகள் பகலில் ஒடுங்கி, ஒரு கோடு போலத் தோன்றும். இரவில் வட்டமாய்க் காணப் படும். இரவில் எலிகளை இலகுவாய்ப் பிடிக்கும்.

3. பூனையின் பாதங்களில் மிருதுவான சதைத் திண்டுகள் இருக்கின்றன. ஆதலால் பூனை நடக்கும்போது சத்தம் உண்டாகாது. விரல்களில் கூரிய நகங்களுண்டு. நடக்கும் போது நகங்களை உள்ளே இழுத்துக்கொள்ளும். எலியின் மேல் பாயும்போது வெளியே நீட்டும்.

4. பூனை இளம் வெயிலிலும், அடுப்பண்டை யிலும் படுத்திருக்கும். நாயைக்கண்டால் ஓடி விடும். சரீரத்தை அடிக்கடி நாக்கால் நக்கும். அதனால் அதன் தேகம் சுத்தமாய் இருக்கும்.

5. மாமிசம், பால், தயிர், வெண்ணெய், நெய், சோறு இவைகளைப் பூனை தின்னும். சிறு பறவை களையும் கொன்று தின்னும். எலிகளை மிகப் பிரியமாய்ப் பிடித்துத் தின்னும்.

6. பூனை தன் குட்டிகளைப் பத்திரமாய்ப்பாது காக்கும். குட்டிகளை வாயில் கவ்விக் கொண்டு போகும். நாயைப்போல் பூனைக்கு அவ்வளவு நன்றியறிதல் இல்லை. வீட்டிலுள்ள பண்டங் களை அது திருடித் தின்னும். எலிகளைக் கொல் வதற்காக நாம் பூனையை வளர்க்கிறோம்.



27] **தபால்காரன்.** உஎ]

தம்பி:—அண்ணு! அண்ணு! இங்கே வாரும்; இதோ ஒரு மனிதன் நிற்கிருன். பாரும். அவன் என்னிடம் ஒரு கடிதம் கொடுத் தான். நமது தகப்பனுருக்கு என்று சொன் ஞன். அவன் யார்?

அண்ணன்:—தம்பி! அவன்தான் தபால்காரன். அந்தக் கடிதத்தைக் கொடு பார்ப்போம்.

தம்பி:—அண்ணு! அது நமது தகப்பனுருக்கு வந்தது என்று எப்படித் தெரியும்?

மகா-ள-ள-ஸ்ரீ

எம். பரமேஸ்வரம்பிள்ளை அவர்கள்,

முனிசிபல் வைஸ்சேர்மன்,

வடக்குமாசிவீதி,

மதுரை.




அண்:—தம்பி! இதோ பார்! நமது தகப்பனார் பெயர், அவருடைய உத்தியோகம், தெருவின் பெயர், ஊரின் பெயர் எழுதி இருக்கின்றன. இதற்கு விலாசம் என்று பெயர்.

தம்பி:—அண்ணா! விலாசம் ஏன் எழுத வேண்டும்?

அண்ணன்:—தம்பி! விலாசத்தைப் பார்த்து, தபால்காரன் கடிதத்தைக் கொடுப்பான்.

தம்பி:—அண்ணா! கடிதத்தின் உள்ளே என்ன எழுதியிருக்கிறது? என்னால் வாசிக்க முடியவில்லை.

அண்ணன்:—தம்பி! நமது மாமா திரிச்சியில் இருந்து நாளை இங்கே வருகிறாராம். அவர் உனக்கு ஒரு சொக்காயும், குல்லாவும் கொண்டு வருகிறாராம்.

தம்பி:—மாமா சொக்காயும் குல்லாவும் கொண்டு வருகிறாரா? அவைகளை நான் அணிந்தால், எவ்வளவு அழகாய் இருப்பேன்!

**அண்ணன்:**—தம்பி! பள்ளிக் கூடத்திற்கு நேர மாயிற்று, போகலாம் வா.

**தம்பி:**—அண்ணு! தபால்காரன் தோளில் தோல் பை தொங்குகிறதே! அது எதற்காக?


**அண்ணன்:**—தம்பி! ஊரில் உள்ள பல பேர்களுக்கும் கடிதங்கள் வரும். அவைகளை அந்தப் பைக்குள் போட்டுக் கொள்வான். கையில் அடங்கக்கூடிய கடிதங்களை எடுத்துக் கொள்வான். ஒவ்வொருவர் விலாசத்தையும் பார்த்துக் கொடுப்பான்.

**தம்பி:**—அண்ணு! இந்தக் கடிதத்தின் தலைப்பில் பாரும், நமது அரசர் தலை மாதிரி ஒரு சீட்டு ஒட்டி இருக்கிறது. அது என்ன?

**அண்ணன்:**—தம்பி அதற்கு லேபில் என்று பெயர். அதன் விலை அரையணு. கடிதம் அனுப்புகிறவர் கடிதம்போய் - சேருவதற்குக் கூலி கொடுக்க வேண்டும் அல்லவா? அதற்காக அரையணு லேபில் வாங்கிக் கடிதத்தின் தலைப்பில் ஒட்டிப்போடவேண்டும்.

**தம்பி:**—அண்ணு! இந்தக் கடிதம் திருச்சியில் இருந்து நம்மிடம் வருவதற்கு அரையணுத் தானு கூலி? எவ்வளவு சகாயம்! யார் இப்படிச் செய்கிருர்கள்?

**அண்ணன்:**—தம்பி! நமது அரசர் நமக்குச் செய்யும் நன்மைகளில் இதுவும் ஒன்று.



## 28] பசியால் அலைந்த நரி. [உஅ

"நந்தவனத்திலோராண்டி" என்ற பாடலின் சந்தம்.

ஒருநாள் சிறுநரி ஒன்று-ஊர்
ஓரச்சாலை எல்லாம் ஓடியே சென்று

இரை ஒன்றும் காணுமல் தேடி-மனம்
ஏங்கியே என்செய்வோம் என்று தள்ளாடி

காட்டுப்புற மெல்லாம் ஓடி-மெத்தக்
கவலையுடன் அங்கு வந்து பின்னுடி

வழியில் ஓர் தோட்டத்தில் நீண்டு-தொங்கும்
வரிசையில் திராட்சைக் குலைகளைக் கண்டு

எட்டின மட்டும் குதித்து-பார்த்து
எட்டாது போகவே இலேசாய் மதித்து

'சீச்சீ பழம்இது தேனே-இதைத்
தின்றால் புளிக்கும் இது நமக்கேனே'

என்றந்த நரியுமே அன்று-அதை
ஏசியே சென்றது அவ்விடம் நின்று.


எட்டாப் பொருளின்மேல் நோக்கம்-வைத்தால்
ஏதும் பயனில்லை; வந்திடும் ஏக்கம்.

---

## 29] பொய் சொல்லாதே. [உகூ

1. முத்து படிப்பில் கெட்டிக்காரன். அவன் தகப்பனார் அவன்மேல் அதிகப் பக்ஷமாய் இருந்தார். அழகான படங்கள் உள்ள புத்தகம் ஒன்று அவனுக்கு வாங்கிக் கொடுத்தார். அவன் அதைப் பிரியமாய்ப் படித்து வந்தான்.

2. அடுத்த வீட்டுப் பாலன் இவனுடைய சிநேகிதன். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தார்கள். இவர்கள் எப்போதும் ஒன்றாய்ப் பள்ளிக்கூடம் போய்வருவது வழக்கம். ஒருநாள் இருவரும் பந்தயம் வைத்து விளையாடினார்கள்.



3. அதில் முத்து தோற்றுன். தன்னுடைய படப் புத்தகத்தை இழந்தான். பாலன் 'தனக்கு நல்ல புத்தகம் கிடைத்தது' என்று சந்தோஷத்தோடு வீடு சென்றுன். முத்து தனக்கு நேர்ந்த நஷ்டத்தை நினைத்து விசனப்பட்டான்; அழுது கொண்டே வீடு வந்து சேர்ந்தான்.

தகப்பனுர்:—"முத்து! ஏன் அழுகிறுய்?" என்று கேட்டார்.

முத்து:—"பாலன் என்னை அடித்து, என் படப் புத்தகத்தைப் பறித்துக்கொண்டான்" என்றுன்.

தகப்பனுர்:—"பாலா! முத்துவின் புத்தகத்தைஏன் பறித்துக்கொண்டாய்?" என்று விசாரித்தார்.

பாலன்:-"நானும் முத்துவும் பந்தயம் வைத்து விளையாடினோம். முத்து தோற்றான். அதனால் படப்புத்தகம் எனக்குக் கிடைத்தது. நான் அதைப் பறித்துக்கொள்ள வில்லை" என்று சொன்னான்.

4. முத்து, தன் குற்றத்தை ஒப்புக் கொள்ள வில்லை; மறுபடியும் பொய்யே சொன்னான். தகப்பனார், முத்தைக் கோபித்து அடித்தார்.

5. அதன் பின் வேலன் என்ற ஒரு துஷ்டப் பையனோடு முத்து சேர்ந்தான். ஒரு நாள் அவனோடு பந்து விளையாடினான். இருவருக்கும் சண்டை வந்தது. முத்தை வேலன் கீழே தள்ளினான். முத்து விழுந்தான்; அவன் கை முறிந்தது. அவனுடைய பந்தையும் வேலன் பறித்துக் கொண்டு ஓடி விட்டான்.

6. முத்து அழுதுகொண்டு வீடு வந்து சேர்ந்தான். அவன், தாயார் தகப்பனாரிடம் தெரிவித்தான். அவன் பொய் சொல்வது வழக்கம் என்று அவர்கள் அதை நம்பவில்லை. முத்து பல நாள் கஷ்டப்பட்டான்; பின்னால் புத்தி வந்தது.

ஆகையால் பிள்ளைகளே! பொய் சொல்லக் கூடாது. பொய்யன் மெய் சொன்னாலும் ஒருவரும் அவன் சொல்லை நம்ப மாட்டார்கள்.

## 30] சுத்தம் சுகம் தரும். [நடை

1. ஒரு ஊரில் கம்பன், வம்பன், என்ற இருவர் இருந்தனர். கம்பன் மிகவும் புத்திசாலி, சௌக்கியமுள்ளவன்; பலசாலி; படிப்பில் கெட்டிக்காரன். வம்பன் புத்தியில்லாதவன்; அவன் நோயாளி; பலமில்லாதவன்; நீங்கள் நோயாளி ஆகாமல் கம்பனைப் போலவே புத்திசாலியாய் இருக்க வேண்டுமானால் கீழே சொல்லியபடி நடந்து கொள்ளவேண்டும்.

2. காற்று:- எப்பொழுதும் நல்ல காற்று அடிக்கும் இடங்களிலேயே இருக்கவேண்டும். குப்பை மேடு, சாக்கடை முதலிய அசுத்தமான இடங்களில் இருக்கக்கூடாது. அவைகளுக்குச் சமீபமான இடங்களில் விளையாடக் கூடாது. அந்த இடங்களில் உள்ள காற்று அசுத்தமானது. ஆதலால் அது வியாதிகளை உண்டுபண்ணும்.

3. சாப்பாடு:- பசி உண்டான போதுதான் சாப்பிட வேண்டும். பசியாதபோது தின்பண்டங்களில் ஆசை வைத்து அடிக்கடி சாப்பிடல் கூடாது. நன்றாய் வேகாத ஆகாரத்தையும் சரியாய்ப் பழுக்காத பழங்களையும், அழுகிய பழங்களையும் தின்னலாகாது. இவைகள் சரியாய் ஜீரணம் ஆகாது. வயிற்றுவலி, வாந்தி முதலிய அநேக வியாதிகளை உண்டாக்கும்.

4. வஸ்திரம்:— நீங்கள் கட்டிக் கொள்ளும் வேஷ்டியும், போட்டுக் கொள்ளும் சட்டையும் சுத்தமா யிருக்கவேண்டும். அசுத்தமான தரையில் உட்காரக் கூடாது. அழுக்கு வஸ்திரங்களைக் கட்டலாகாது. அவைகளில் உள்ள அழுக்குகள் உங்கள் தேகத்தில் சேர்ந்து, சிரங்கு முதலிய பல வியாதிகளை உண்டாக்கும்.

5. குளித்தல்:— தினந்தோறும் சுத்த ஜலத்தில் குளிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தேகத்தில் உள்ள அழுக்குகள் மயிர்த் துவாரங்களை மூடிக்கொள்ளும். வியர்வை நீர் வெளிவராமல் வியாதியை உண்டுபண்ணும்.

6. சனிக்கிழமை புதன்கிழமை எண்ணெய் நீராடவேண்டும். தலைக்கு எண்ணெய் தடவி, சீப்பால் வாரிக் கொள்ள வேண்டும். இவைகளால் தலையில் பேன் தங்காது. காற்றடித்து அடைந்திருக்கும் தூசி, புழுதி முதலியவை தலையை விட்டு நீங்கிவிடும். அப்படிச் செய்யாவிடில் தலைமயிரில் சிக்குப்படும். பொடுகு முதலிய சிரங்குகள் தலையில் வெடிக்கும்.

ஆதலால் சிறுவயதில் இருந்தே மேலே சொன்ன விதமாக நடந்து வந்தால் கம்பனைப் போல நல்ல சுகம் பெறலாம். தேக பலமும், கல்வியில் தேர்ச்சியும் அடையலாம்.

பிள்ளைகளே இதனால் 'புத்திமான் பலவான் ஆவான்' என்பதை அறியலாம்.



## 31] எலி. [௩௧

1. சிறுவர்களே! இது ஒரு எலி. இது நமது வீட்டிலுள்ள வஸ்துக்களைப் பாழாக்கி விடுகிறது. எலி சுவர்களிலும், தரையிலும் வளை தோண்டி, அதில் குடி இருக்கும்.


2. இதன் உடம்பில் மிருதுவான மயிர் அடர்ந்து இருக்கிறது. தடவிப்பார்த்தால் மழ மழ என்று இருக்கும். பூனைக்கு இருப்பது போல் எலிக்கும் மீசை மயிர் உண்டு. இதன் நகங்கள் கூர்மையாய் இருக்கும். ஆகையால் இது சுவரின் மேல் வெகு இலகுவாய் ஏறும். இதற்கு இரவில் கண் நன்றாய்த் தெரியும்.

3. எலிக்குக் கூர்மையான பற்கள் உண்டு. இது துணி முதலியவற்றைக் கடித்து விடும். இதற்கு வட்டமான காதுகள் உண்டு. இது மெதுவான சத்தத்தையும் நன்முய்க் கேட்கும்.

4. சுண்டெலி, வெள்ளெலி, முள்ளெலி, மூஞ்சூறு, பெருச்சாளி என்பவைகளும் எலி இனத்தைச் சேர்ந்தவைகளே.

5. வீட்டில் வசிக்கும் எலிகள், நெல், மிளகாய், தின் பண்டங்கள் முதலியவற்றைத் திருடும். வயலில் இருக்கும் எலிகள் வரப்புப் பொந்துகளில் தானியங்களைச் சேகரித்து வைக்கும். மனிதர் சாப்பிடும் எல்லா ஆகாரங்களையும் எலி தின்னும்

6. எலி வீட்டில் பண்டங்களைக் கடித்து, நாசம் செய்யாமல் இருப்பதற்காகச் சிலர் பூனையை வளர்க்கிமுர்கள். பூனையைக்கண்டால் எலிக்குப் பயம். பூனை வளருகிற வீட்டை விட்டு எலிகள் அடுத்த வீட்டுக்குப் போய்விடும். பூனை இல்லாத வீடுகளில் எலிப்பொறி வைத்து, எலியைப் பிடிப்பார்கள்.



7. இது ஒருவகை எலிப்பொறி. இதில் அகப்பட்ட எலி ஓட முடியாது. உயிருடனே இருக்கும். பிறகு வீட்டுக்காரன் அதைக் கொன்றுவிடுவான்.



இது மற்றொரு வகை எலிப் பொறி. இதில் அகப்பட்ட எலி உடனே இறந்து விடும்.

8. பிள்ளைகளே! திருடுவதால் எப்பொழுதும் இவ்விதம் துன்பம் உண்டாகும். சில சமயங்களில் உயிருக்கும் கேடு நேரிடும்.

---

## 32] மதிகெட்ட காக்கை. [ஙஉ

"வாசுதேவனே" என்ற பாடலின் சந்தம்.


கும்பல் கும்பலாய்-பெரும் கூட்டம் கூட்டமாய்
செம்மறி யாடு பல சேர்ந்து மேய்ந்தது. (1)

கழுகு அவைகளில் ஒன்றைக் காலில் இடுக்கியே
பழுவுடன் தூக்கி மேலே பறந்து சென்றது. (2)

சென்றதைக் கண்ட ஒரு சிறிய காக்கையும்
இன்று நாமொரு ஆட்டை எடுப்போ மென்றெண்ணி, (3)

அருகில் பறந்துபோய் ஒரு ஆட்டின் முதுகிலே
இருந்து கொண்டதைக் காலால் இடுக்கிப் பார்த்தது (4)

சுருட்டை மயிர்களில் கால்கள் சொருகிக்கொள்ளவே
உருட்டி உருட்டியே பார்த்து ஒன்றும் முடியாமல், (5)



விடவிடத்துப் போய்ச் சிறகை வீசி வீசியே
பட படவென்று அடித்துப் பறக்க முயன்றது. (6)

அந்தச் சத்தத்தைக் கேட்டு ஆட்டுக் காரனும்
வந்து காக்கையைப் பிடித்து மகிழ்ச்சியாகவே (7)

தன் மகன் கையில் கொண்டு தந்திட அவன்
'என்ன அதிசயம்! இது ஏதெனக்' கென்றான். (8)

'கழுகு செய்ததைத் தானும் கருதிச் செய்ததால்
பழுதடைந்தது மகனே பார்' என்று சொன்னான். (9)

எந்தக்காரியம் செய்ய எண்ணினாலுமே
சொந்தப் பலத்தையே கருதித் துணியவேணுமே. (10)

---

33] ## சங்கரன். [நரு

1. செல்லூர் என்ற கிராமத்தில், சங்கரன் என்ற ஒரு சிறுவன் இருந்தான். அவன் ஒரு துஷ்டப் பையன். தாயார் தகப்பனுருக்கு அடங் காதவன். தன் இஷ்டப்படியே திரிவான்.

2. ஒரு நாள் சில பிள்ளைகளோடு வீதியில் விளையாடினான். அப்பொழுது மாலை நேரம். அவ்வழியில் ஒருவன் ஒரு குதிரையை ஓட்டிக் கொண்டு போனான். சங்கரன் பார்த்தான். குதிரையின் வாலைப் பிடிக்க நினைத்தான். அதன் காலின் பக்கம் நெருங்கி வேடிக்கையாக ஓடினான்.

3. குதிரைக்காரன் பார்த்தான். பையனைக் கூப்பிட்டான். "தம்பி! குதிரை உதைக்கும். தூரப்போய்விடு" என்று சொன்னான். சங்கரன் "எனக்குக் கால் இல்லையோ" என்று துடுக்காய்ப் பதில் சொன்னான். குதிரைக்காரன் பலதடவை சொல்லியும் சங்கரன் கேட்கவில்லை.


4. சங்கரன் சமீபத்தில் நெருங்கி வருவது குதிரைக்குத் தெரிந்தது. தன் காலைத் தூக்கிப் படீர் என்று ஒரு உதை உதைத்தது. உதை சங் கரன் முகத்தில் பட்டது. முன் பற்கள் நான்கு உதிர்ந்துவிட்டன. உடனே மயங்கித் தரையில் விழுந்தான். அவன் தாய் தந்தையர் அறிந்

தார்கள். அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். முகம் வீங்கிப் பல நாள் கஷ்டப் பட்டான். பிறகு சவுக்கியப் படுத்தினார்கள். அவன் பிழைத்ததே கஷ்டம் ஆயிற்று.

5. அதுமுதல் சங்கரனைப் பார்த்தவர்கள் எல்லோரும் 'ஒட்டைப்பல் சங்கரா! ஒட்டைப்பல் சங்கரா! என்று கூப்பிட்டார்கள். வயது ஆக ஆக அவனுக்கு வெட்கம் அதிகரித்தது. தகப்பனாரிடம் சொன்னான். அவர் அவனைப்பட்டணத்துக்கு அழைத்துச் சென்றார். புதுப்பற்கள் கட்டுவித்துக் கூட்டிவந்தார். அதன் பின்னும் அவனுடைய துஷ்டத்தனம் அடங்கவில்லை. 'தன்னைப் பரிகாசம் செய்தவர்கள் அறியவேண்டும்' என்று நினைத்தான். கடைவீதி சென்றான்.

6. ஒவ்வொரு கடையிலும் "இஞ்சி இருக்கிறதா இஞ்சி" என்று பல்லைக்காட்டிக்கொண்டே போனான். ஆனால் வாங்கவில்லை. ஒரு கடைக்காரனுக்கு இந்தச் சங்கதி தெரிந்தது. கோபமாய் அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்தான். கட்டிய பற்கள் கீழே விழுந்து விட்டன. ஆகையால் முன்னிலும் அதிகவெட்கம் அடைந்தான்.

பிள்ளைகளே! சங்கரன் கதியைப் பார்த்தீர்களா! நீங்களும் துஷ்டத்தனம் செய்தால், சங்கரனைப் போலவே கஷ்டம் அடைவீர்கள்.



## 34] பல்லி. [௩௪

1. பல்லி சாதாரணமாக நமது வீடுகளிலும் மரங்களிலும் வசிக்கும். இது சாதுவானது.

2, பல்லியின் நிறம் அது வசிக்கும் இடத்திற்குத் தக்கதாய் இருக்கும். அதன் உடம்பு நீண்டு மெலிந்து இருக்கும். அதன் தோல் இலேசானது. அதில் உரோமங்களாவது, இறகுகளாவது கிடையாது. சில வேளைகளில் பல்லியின் வயிற்றிலுள்ள முட்டை வெளியில் தெரியும்.

3, பல்லிக்கு நான்கு குறுகிய கால்கள் உண்டு. கால்கள் நான்கும் ஒரே அளவாய் இருக்கும். அதன் நுனியில் விரல்கள் உண்டு. இது தன் கால்களால் நகர்ந்து செல்லும். கண்ணாடியின் மீதும் தலைகீழாய் ஓடும். நழுவி விழாதபடி அதன் பாதங்களில் சதைப் பற்றுகள் உண்டு.

4. பல்லியின் வால் நீண்டு இருக்கிறது. அது இலேசாய் அறுந்து போகக்கூடியது. சில வேளை அதற்கு அபாயம் நேரிடும்போது வாலை அறுத்துக்கொண்டு ஓடிப்போகும். அறுந்த வால் சிறிது நேரம் வரை துள்ளும். அறுந்த இடத்தில்மறுபடியும் வால் வளர்ந்துவிடும்.

5. பல்லியானது எறும்பு, ஈ. கொசு, ஈசல், சிறு பூச்சிகள் முதலியவற்றைப் பிடித்துத் தின்னும். அதன் வாயிற் பற்கள் இல்லை. ஆதலால் அது தன் ஆகாரத்தை மென்று தின்னாது. அவைகளை அது முழுமையாக விழுங்கும்.

6. பல்லி, மணல் குழிகளில் முட்டை இடும், அதன் முட்டை உருண்டை வடிவம்; வெண்மை நிறம். அது தடவை ஒன்றுக்குப் பன்னிரண்டு முட்டைகள் வரை இடும். அம் முட்டைகளை அது அடை காக்காது. சூரிய வெப்பத்தால் முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படும். குஞ்சு தாயைப்போலவே சிறிதாய் இருக்கும். தாய்ப் பல்லி தன் குஞ்சுகளைக் கவனிப்பதில்லை. குஞ்சு தானே இரை தேட ஆரம்பிக்கும்.

7. பல்லியின் மூத்திரம் அதிக காரமுள்ளது. அது நமது தேகத்தின் மீது பட்டால் பட்ட இடம் பொரிந்து விடும். ஆதலால் பல்லி நம் மேல் விழுந்தால் உடனே குளிக்க வேண்டும். பெரிய பல்லிக்குக் கெவுளி என்று பெயர்.

## 35] உண்மை பேசிய பையன். [நடு

### முதற் பாகம்.

மதுரையில் சோமநாதன் என்ற ஒரு பிரபு இருந்தார். அவருக்குத் தோட்டங்களும், பங்களாக்களும் அநேகம் இருந்தன. அவரிடம் அநேகர் வேலைபார்த்து வந்தார்கள். அவர்கள் 'சரியாய் வேலை செய்து வருகிறார்களா' என்று வேலைக்காரர்களை அடிக்கடி விசாரிப்பார்.

ஒரு நாள் தோட்டக்காரன் அவர் வீட்டுக்கு வந்தான். பிரபு அவனைப் பார்த்து,

*"ஸ்ரீ ராமச் சந்திரனே" என்ற பாடலின் சந்தம்.*

நீ நமது தோட்டத்திலே நிதமும் சென்று செடிகளுக்கு
நீர்பாய்ச்சி வருகிறாயா? சோல்! சோல்? சோல்?
நேர்த்தியாய் மனப் பூர்த்தியாய்.

தோட்டக்காரா! நமது தோட்டத்தில் உள்ள பூச்செடிகள், மாங்கன்றுகள் நன்றாய் வளர்கின்றனவா? தண்ணீர் பாய்ச்சி வருகிறாயா? களைகள் எடுத்து வருகிறாயா? [என்று கேட்டார்.]

தோட்டக்காரன்:—ஐயா!

நான் நமது தோட்டத்திலே நட்டுவைத்த மாங்கன்றுகள்
நான்கில் ஒன்று வாடினது 2 மெய். மெய். மெய்.
நட்டமாய் ஒன்றுங் கெட்டது.

பூச்செடிகள் செழிப்பாய் இருக்கின்றன. மாங் கன்றுகள் நான்கு பயிர் செய்தேன், இரண்டு நன்ருய் வளர்கின்றன. ஒன்று பட்டுப்போயிற்று. மற்ரென்று வாடி யிருக்கிறது. [என்று சொன்னுன்.]

**பிரபு:**—தோட்டக்காரா!

ஏன் அதனைக் கவனியாமல் இந்த விதமாய் இருந்தாய்?
இன்னுமது போலிராமல் பார். பார். பார்.
ஏற்றியே தினம் போற்றியே.

இரண்டு கன்றுகள் ஏன் கெட்டுப்போயின? நீ சரியாய்க் கவனிக்க வில்லை. செழிப்பான இரண்டு மாங்கன்றுகளையும் கவனித்துப்பார்.

**தோ:**—ஐயா! உத்திரவுப்படியே செய்கிறேன். [என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.]

மறுநாள் விடுமுறை நாளாய் இருந்தது. பிரபுவின் குமாரன் ராமனைப்பார்க்க, அவன் சிநேகிதன் கிருஷ்ணன் வந்தான். இருவரும் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

**ராமன்:**—(கிருஷ்ணனைப் பார்த்து)

இன்று லீவு நாளதனுல் இருவரும் நம் தோட்டத்துக்கு
ஏகி வருவோம் கிருஷ்ணு! வா! வா! வா!
ஏகமாய் வேகு வேகமாய். (இ)

கிருஷ்ணு! இன்று நமக்கு லீவு நாள். நான் எங்கள் தோட்டத்துக்குப் போகிறேன். நீயும் வருகிருயா? அங்கே விளையாடலாம்.

கிருஷ்ணன்:—அன்புள்ள சிநேகிதனே! உன் மனம்போல் போய்வருவோம் வா!

[இருவரும் புறப்பட்டுத் தோட்டம் வந்தார்கள்.]

கிருஷ்ணன்:—(ராமனைப் பார்த்து) ராமா!

மதுரமான மாங்கனியும் மாதுளங் கோய்யாக்கனியும்
வாழையும் பலாக்கனியும் பார்! பார்! பார்!
மாட்சியே நல்ல காட்சியே.

தோட்டத்தில் செடிகள் வளர்ந் திருக்கும் செழிப்பும் கனிகள் பழுத்துத் தொங்கும் அழகும், எவ்வளவு நேர்த்தியாய் இருக்கிறது பார்! என்று சந்தோஷமாய்ச் சுற்றிப் பார்த்தார்கள்.]

ராமன்:—(கிருஷ்ணனைப்பார்த்து) கிருஷ்ணு!

இதில் இரண்டு மாங்கனியும் இதமுள்ள கோய்யாக்கனியும்
இச்சை யுடனே பறித்து நாம்! நாம்! நாம்!
இன்பமாய்ப் புசிப்போம் நண்பனே.

கிரு:—ராமா! இந்த மாதுளம் செடியில் இரண்டு பழங்கள், கொய்யாச் செடியில் நான்கு பழங்கள் பறித்துவிட்டேன். இதோ தோட்டக்காரன் கத்தி இருக்கிறது. இதனுல் பழங்களை அறுத்துச் சாப்பிடுவோம் என்ருன்.

[இருவரும் பழங்களை அறுத்துச் சாப்பிட்டார்கள். கத்தி அறுக்கும் கூர்மையை ராமன் பார்த்தான்; கத்தியைக் கையில் எடுத்தான். பக்கத்தில் இருந்த செடிகளின் சமீபத்தில் சென்றான்.]

ராமன்:—(கிருஷ்ணனைப் பார்த்து) கிருஷ்ணா!

கூர்மையுள்ள கத்தியிது கூட்டமான செடிகள்தனைக்
கூறுகூறாய் நறுக்குவதைப் பார்! பார்! பார்!
கூர்மையே கத்தி நேர்மையே.

இந்தக் கத்தி எவ்வளவு கூராய் இருக்கிறது பார்த்தாயா? இது செடிகளை எவ்வளவு சீக்கிரம் நறுக்குகிறது பார்.


[என்று சொல்லிக் கொண்டே சில செடிகளை நறுக்கி விளையாடினார்கள்.]

கிருஷ்ணன்:—(ராமனைப் பார்த்து) ராமா!

வெகுநேர மாய்விட்டதால் வீட்டுக்குநாம் போகவேணும்
வேகமாக ராமனேநீ வா! வா! வா!
விரைவுடன் செல்வோம் விரைவுடன்.

நாம் இங்கே வந்து வெகு நேரம் ஆய் விட்டது, வீட்டுக்குப் போவோம் வா.

[இருவரும் வீட்டுக்குத் திரும்பி விட்டார்கள்.]



## 36] உண்மை பேசிய பையன். [௩௬

இரண்டாம் பாகம்.

பிரபு மறுநாள் தோட்டத்துக்குப் புறப்பட்டார். ராமனையும் அழைத்துக்கொண்டு வந்தார். தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தார். அங்கே சில செடிகள் வெட்டப்பட்டிருந்தன.

**பிரபு**:—(தோட்டக்காரனைப்பார்த்து)

எவரடா இச்செடிகள் தன்னை இப்படி அறுத்துவிட்டார்?
இங்கு காவல் செய்கிறுயோ பார்! பார்! பார்!
ஏற்குமோ முறை ஏற்குமோ?

தோட்டக்காரா! இந்தச் செடிகளை வெட்டினது யார்! இப்படித்தான் தோட்டத்தைப் பார்த்து வருகிருயா? [என்று கோபமாய்க் கேட்டார்.]

தோட்டக்காரன்:—(நடுநடுங்கி)ஐயா!

எவரோவந்து செடிகள் தன்னை இந்தவிதம் நறுக்கிவிட்டார்
எனக்கேதிரில் செய்யவில்லை மெய். மெய். மெய்.
ஏதுமே தெரி யாதையா.

நான் வெளியில் போயிருந்தபோது யாரோ வந்து இப்படிச் செய்திருக்கிருர்கள். இன்னுர் என்று எனக்குத் தெரியவில்லை.

பிரபு:—தோட்டக்காரா!

உடன் அவரைக் கண்டுபிடித் தொப்பிவிக்காவிட்டாலிங்கு
உன்வேலை தொலைந்துபோகும் பார்! பார்! பார்!
ஓடடா! அவரைத் தேடடா!

உடனே நீ அவர்களைக் கண்டுபிடித்து என்னிடம் ஒப்புவிக்கவேண்டும். இல்லாவிடில் உன்னை வேலையைவிட்டு நீக்கிவிடுவேன். இந்த மாதச் சம்பளத்தையும் பிடித்துவிடுவேன்.

தோட்டக்காரன்:—

ஐயா உத்திரவுப்படி யான்நடந்து கொள்ளுகிறேன்.
அன்பா யெனை மன்னிப்பீர் தாம். தாம். தாம்.
ஆதாரம் உங்கள் பாதாரம்.

ஐயா மன்னிக்கவேண்டும், உத்திரவுப்படி நடந்து கொள்கிறேன். [என்று சொல்லிப் போய்விட்டான்.] [ராமன் நடந்த சங்கதிகளைக் கவனித்தான். அவன் தகப்பனுரிடம் நடந்த உண்மையைச் சொல்லிவிட நினைத்தான்.]

ராமன்:—[தகப்பனரைப் பார்த்து]ஐயா!

நானே நேற்று வந்தேன் இங்கு நட்டிருந்த செடிகளையே
நறுக்கி விட்டேன் அறியாமலே மெய். மெய். மெய்.
நாடியே விளை யாடியே.

நேற்று இங்கு விளையாட வந்திருந்தேன்; அப்போது தோட்டக்காரன் இங்கு இல்லை. நான் அவனுடைய கத்தியை எடுத்தேன். அது கூர்மையாய் இருந்தது. நான்தான் இந்தச் செடிகளை வெட்டி விட்டேன். நான் அறியாமல் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும்.

[என்று உண்மையைச் சொன்னன். பிரபுவுக்குத் தன்மகன் உண்மையைச் சொன்னதினல் சந்தோஷம் உண்டாயிற்று.]

பிரபு:—[ராமனைப் பார்த்து] 'கண்மணி! நீ செய்த குற்றம் பெரியது. மரம் வளருவதற்கு எத்தனை நாட்கள் செல்லும்? விளையாட்டாக வெட்டி விட்டாயே! வளர்ந்தால் எவ்வளவு பலன் தரும்! வளரும் வரை பாதுகாக்க வேண்டாமா? நீ உண்மை சொன்னதற்காகச் சந்தோஷம் அடைகிறேன். நீசெய்த பிழையை நான் மன்னிக்கிறேன். இனிமேல் நீ அப்படிச் செய்யாதே" என்று சொல்லி அவன் பேரில் அதிக பக்ஷமாய் இருந்தார்.

## 37] விடுகதைகள். [௩எ

1. செப்பு நிறைய முத்து. அது என்ன?
(மாதுளம் பழம்)

2. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?
(உள்ளங்கை)

3. காலில்லாத பந்தல்
காணக் காண விநோதம். இது என்ன?
(வானம்)

4. ஊருக்கெல்லாம் ஒரு துப்பட்டி. இது என்ன?
(வானம்)

5. அடிமலர்ந்து நுனிமலராத பூ என்ன பூ?
(வாழைப்பூ)

6. கைகள் உண்டு கால்கள் இல்லை;
வயிறு உண்டு குடல் இல்லை;
கழுத்து உண்டு தலை இல்லை; இது என்ன?
(சட்டை)

7. குடிக்கத் தண்ணீர் உண்டு; ஆனால்
குளிக்கத் தண்ணீர் இல்லை. இது என்ன?
(இளநீர்)

8. காடெல்லாம் சுற்றிவரும்;
கண்ட தண்ணீர் குடியாது. இது என்ன?
(செருப்பு)

9. ஓட்டமாய் ஓடும்; உருண்டு
உருண்டு ஓடும்; பள்ளத்தைக்
கண்டால் பாய்ந்து ஓடும். அது என்ன?
(தண்ணீர்

# உலக நீதி.

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்லவேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ (டு)
இணங்கவேண்டாம்.
5. போகாத இடந்தனிலே
போகவேண்டாம்.
6. அஞ்சாமல் தனிவழியே
போகவேண்டாம்.
7. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்கவேண்டாம்.
8. தனம் தேடி உண்ணுமல்
. புதைக்கவேண்டாம்.
9. தருமத்தை ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.
10. கொலைகளவுசெய்வாரோ (டு)
இணங்கவேண்டாம்.
11. கற்றவரை ஒரு நாளும்
பழிக்கவேண்டாம்.
12. வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத்
திரியவேண்டாம்.

13. மதியாதார் தலைவாசல்
மிதிக்கவேண்டாம்.
14. மூத்தோர் சொல் வார்த்தை தனை
மறக்கவேண்டாம்.
15. முன்கோபக் காரரோ (டு)
இணங்கவேண்டாம்.
16. சேராத இடந்தனிலே
சேரவேண்டாம்.
17. செய்த நன்றி ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.
18. பிணையிட்டுத் துணைபோய் நீ
நிற்கவேண்டாம்.
19. காணாதவார்த்தை தனைக்
கட்டுரைக்கவேண்டாம்.
20. புண்படவே வார்த்தைதனைச்
சொல்லவேண்டாம்.
21. வாதாடி வழக்குரைத்துச்
செல்லவேண்டாம்.
22. திறம் பேசிக் கலகமிட்டுத்
திரியவேண்டாம்.
23. இறந்தாலும் பொய் தன்னைச்
சொல்லவேண்டாம்.
24. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்கவேண்டாம்.

## ஜில்லா பூகோள வர்க்கம்.

இவை பசுமலை உயர்தரபாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் நே. ரா. சுப்பிரமணியசர்மா அவர்களால் துரைத்தனத்தார் ஏற்படுத்திய புதிய விதிகளை அனுசரித்து எழுதப் பெற்று, தமிழ்நாடு முழுதும் பாராட்டப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| மதுரை ஜில்லா பூகோள | சாஸ்திரம் | 0—5—0 |
| இராமநாதபுரம் ஜில்லா | ,, | 0—5—0 |
| திருநெல்வேலி ஜில்லா | ,, | 0—5—0 |
| திரிச்சிராப்பள்ளி ஜில்லா | ,, | 0—5—0 |
| தஞ்சாவூர் ஜில்லா | ,, | 0—5—0 |
| சேலம் ஜில்லா | ,, | 0—5—0 |
| கோயம்புத்தூர் ஜில்லா | ,, | 0—5—0 |
| வட ஆற்காடு ஜில்லா | ,, | 0—5—0 |
| தென் ஆற்காடு ஜில்லா | ,, | 0—5—0 |
| செங்கற்பட்டு ஜில்லா | ,, | 0—5—0 |

இவற்றுள் அந்தந்த ஜில்லாக்களின் சரித்திரமும் பொதுவாய் அரசியலும் சுருக்கமாக எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இதர ஜில்லாக்களின் பூகோளம் விரைவில் வெளிவரும்.

## உபபாடமாக வைக்கத்தகுந்த புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| கதையும் பாட்டும் 1, 2 பாகங்கள் | தனித்தனி | 0—3—0 |
| இராணி மங்கம்மாள் சரித்திரம் | .... | 0—1—0 |
| திருமலை நாயக்கர் சரித்திரம் | .... | 0—2—0 |
| ௸ பெரிய புத்தகம் | .... | 0-10—0 |
| கிருஷ்ணன் தூது | .... | 0—4—0 |
| பெரியார் பெருமை | .... | 0—3—0 |
| கண்ணன் பாலலீலை | .... | 0—6—0 |
| இராமாயண சார சங்கிரகம் | .... | 0—6—0 |
| பாரத சார சங்கிரகம் | .... | 0—6—0 |
| பாகவத சார சங்கிரகம் | .... | 0-10—0 |
| விராட நகரத்தின் ரகசியம் | .... | 0-12—0 |
| விநோதக் கதைகள் | .... | 0-10—0 |
| மாணவர் நீதிக்கதைகள் | .... | 0—6—0 |
| நல்லொழுக்க போதம் | .... | 0—6—0 |

## மதுரை புத்தக வியாபாரம்,

# இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் வெளியிட்ட தமிழ்ப் புத்தகங்கள்.

*துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றன.*

புதிய பாடப் புத்தகங்கள்:— *இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனுமுறைக்கிணங்க, சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணி சாஸ்திரம், தாவர சாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளன.*

| | |
|---|---|
| புதிய முதல் பாடம் | 0—2—0 |
| புதிய இரண்டாம் பாடம் | 0—3—0 |
| புதிய மூன்றும் பாடம் | 0—3—6 |
| புதிய நான்காம் பாடம் | 0—4—6 |
| புதிய ஐந்தாம் பாடம் | 0—6—0 |

---

## நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

| | | |
|---|---|---|
| உலகநீதி | நீதிவாக்கியக்கதைகள் | 0—2—0 |
| ஆத்திசூடி | நீதிவாக்கியக்கதைகள் | 0—2—0 |
| கொன்றைவேந்தன் | நீதிவாக்கியக்கதைகள் | 0—2—0 |
| வெற்றிவேற்கை | நீதிவாக்கியக்கதைகள் | 0—3—0 |
| மூதுரை | நீதிவாக்கியக்கதைகள் | 0—5—0 |
| நல்வழி | நீதிவாக்கியக்கதைகள் | 0-10—0 |

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணுக்கர்கள் நெட்டுருக் கொண்டு பதவுரை, கருத்துரைகளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங்கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேல் பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறு எழுதப் பெற்றுள்ளன. நல்லொழுக்கப்போதத்திற்கும் இவை நற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம்போஸிஷன் என்னும் பாஷா ஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.

---